DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : STC **4/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : முருகையா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 18.07.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 18th July 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது பன்னீருத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சங்கரன்கோவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்த வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. 02.02.2018 ம் தேதி காலை 10.05 மணிக்கு சங்கரன்கோவிலிருந்து கடையநல்லூர் சென்று பின்னர் கடையல்லூரில் 11.30 மணிக்கு பேருந்து எடுத்துகொண்டு 12.20 மணிக்கு சங்கரன்கோவில் வந்துகொண்டிருக்கும்போது கோமதியம்பிகை டிரைவிங் ஸ்கூல் அருகில் வரும்போது நான் பேருந்தை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓட்டிவந்தேன். அப்போது எனக்கு எதிர்திசையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இருசக்கரவாகனத்தில் வந்தவர் நான் ஓட்டிச்சென்ற பேருந்தின் மீது மோதிவிட்டார். நான் பேருந்தை மிதமான வேகத்தில்தான் ஓட்டிவந்தேன். நான் இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்தவர் வந்ததை பார்த்து பேருந்தை

நிறுத்திவிட்டேன். ஆனால் நான் பேருந்தை நிறுத்தியதைகூட கவனிக்காமல் இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்தவர் எனது பேருந்தின் வலதுபக்கம் மோதிவிட்டார். அந்த சமயத்தில் உடனே டிராபிக் போலீசார் வந்துவிட்டார்கள். நான் இருசக்கரவாகனத்தில் வந்தவருக்கு காயம் ஏற்பட்டது. அவருக்கு தண்ணீர் தெளித்து டிராபிக் போலீசார்வந்த வாகனத்தில் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். நான் காவல்நிலையத்திற்கு வந்த பிறகு இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்தவர் துரைச்சாமியாபுரத்தை சேர்ந்த முருகன் என தெரிந்துகொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 02.02.2018 தேதியில் சுமார் மாலை 3 மணி பொழுதில் விசாரித்தார்கள். நான் போலீசார் விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் எனது முதல்விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களை எனது புகார் மனுவிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகார் மனுவை நான்தான் எழுதிக்கொடுத்தேன். புகார் மனுவை எந்த தேதியில் எத்தனை மணிக்கு நான் காவல்நிலையத்தில் கொடுத்தேன் என்றால் 02.02.2018ம் தேதியில் மாலைநேரத்தில் கொடுத்தேன். எத்தனை மணிக்கு புகார் மனுவை கொடுத்தேன் என்று குறிப்பாக எனக்கு ஞாபகம் இல்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை இருவழிசாலை என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு 10 அடிக்கு முன்பு

3 சாலைகள் சந்திக்கும் இடம் உள்ளது என்றால் விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சுமார் 10 அடிக்கு முன்பு 3 சாலைகள் சந்திக்கும் இடம் உள்ளது. கோமதியம்பிகை டிரைவிங் ஸ்கூல் மற்றும் மேற்படி 3 சாலைகள் சந்திக்கும் இடத்திற்கும் இடையில் ஒரு வேகத்தடை உள்ளது என்றால் சரியல்ல. கோமதியம்பிகை டிரைவிங் ஸ்கூல் மற்றும் மேற்படி 3 சாலைகள் சந்திக்கும் இடத்திற்கும் இடையில் ஒரு வேகத்தடை உள்ளது என்றாலும், அவ்வாறு வேகத்தடை இல்லை என்று நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்த எவ்வளவு நேரம் கழித்து போக்குவரத்து காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தனர் என்றால் சம்பவமானது மதியம் 12.20 மணிக்கு நடைபெற்றது. சம்பவம் நடந்து சில நிமிடங்களிலேயே போக்குவரத்து காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டனர். நான் அரசு போக்குவரத்து கழக தொழிற்சங்கத்தில் (தொ.மு.ச.) உறுப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபிறகு சம்பவம் குறித்து புகார் அளிப்பபதற்கு நான்மட்டும் காவல்நிலையம் சென்றேனா என்றால் புகார் மனு அளிப்பதற்கு நான், பேருந்து நடத்துனருடன் சென்றேன். சம்பவம் நடப்பதற்கு முன்போ, அதற்கு பின்போ எனக்க எதிரியை தெரியாது என்றால் சம்பவம் நடந்த நாள் மட்டும்தான் நான் எதிரியை பார்த்தேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பேருந்துகள் வழக்கமாக வேகமாக செல்லும் என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில்தான் புகார் மனு அளித்துள்ளேன் என்றாலும், விபத்திற்கு உட்படுத்தப்பட்டவர் மயங்கிய நிலையில இருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக புகார் மனு அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு உட்படுத்தப்பட்டவர்தான் புகார் மனு அளித்திருக்கவேண்டும் என்றாலும், நான் எனது தொழிற்சங்க தலைவரின் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிக்கு எதிராகபொய்யாக புகார் மனு அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் கூறிய நாள் நேரத்தில் சம்பவம்

எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பேரு ந்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்றதால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : ST**C 4/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : வெற்றிவேல்முருகன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 18.07.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 18th July 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

<u>முதல்விசாரணை:</u>

நான் தற்போது பாண்டியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சங்கரன்கோவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்த வருகிறேன். அசா.1 முருகையா எனக்கு தெரியும். அவர் ஓட்டுநர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 02.02.2018 ம் தேதி காலை 10.05 மணிக்கு சங்கரன்கோவிலிருந்து அரசு பேருந்தை எடுத்துக்கொண்டு கடையநல்லூர் சென்றுவிட்டு கடையநல்லூரிலிருந்து 11.20 மணிக்கு பேருந்தை எடுத்துக்கொண்டு சங்கரன்கோவில் நோக்கி வந்துகொண்டிருந்தபோது 12.20 மணியளவில் கோமதியம்பிகை டிரைவிங் ஸ்கூலுக்கு முன்பு உள்ள ரோட்டில் வந்துகொண்டிருந்தபோது நான் பேருந்தின் உள்ளே உட்கார்ந்திருந்தேன். அப்போது திடீரென பேருந்துக்கு முன்னால் டம் என சத்தம் கேட்டது. பேருந்து நின்றுவிட்டது. எங்கள் பேருந்து மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தது.

அ.சா.1 முருகையாதான் அந்த பேருந்தை ஓட்டினார். நான் இறங்கி சென்று பார்த்தபோது பேருந்தின் ஓட்டுநர் சைடில் இருசக்கரவாகனம் பம்பரில் முட்டி சேதம் ஏற்பட்டது. நான் இருசக்கரவாகனத்தில் வந்த நபரை பார்த்தபோது தோள்பட்டையிலும்,நாடியிலும் காயம் இருந்தது. ஆஜர்எதிரிதான் அந்த இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்த நபர். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் உதவியுடன் அங்கு வந்த காவல்துறை வாகனத்தில எதிரியை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். நான் பணப்பையை வைத்திருந்ததால் எதிரியுடன் ஒன்றாக மருத்துவமனைக்கு செல்லவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் எங்கு வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்று மதியம் 12.25 மணிக்கு என்னை விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலீசார் எந்த உடை அணிந்திருந்தனர் என்றால் அவர்கள் காக்கிநிற உடை அணிந்திருந்தனர். என்னை விசாரித்த போலீசார் போக்குவரத்து காவல்துறையை சார்ந்தவர்களா அல்லது சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தை சார்ந்தவர்களா என்றால் சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தை சார்ந்தவர்கள். எதிரியை எந்த வண்டியில் ஏற்றிச்சென்றார்கள் என்றால் ஜீப் வண்டியில் ஏற்றிச்சென்றார்கள். சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தது தவிர்த்து வேறு எங்கேனும் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் வைத்து விாசரணை செய்தபோது நான் எந்த விபரங்களை கூறினேனோ அதே விபரங்களைத்தான் நான் முதல்விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை அகலமான இருவழிப்பாதை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு 10 அடிக்கு முன்பு 3 சாலைகள் சந்திக்கும் இடம் உள்ளது

என்றால் சரிதான். கோமதியம்பிகை டிரைவிங் ஸ்கூலுக்கும் மேற்படி 3 சாலைகள் சந்திக்கும் இடத்திற்கும் இடையில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த சாலையில் வழக்கமாக பேருந்துகள் மேற்கிலிருந்த வலதுபுறமாக வந்து இடதுபக்கமாக திரும்பும் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது டம் என்ற சத்தம் கேட்டபிறகுதான் நான் பேருந்திலிருந்து கீழே இறங்கினேன் என்றால் சரிதான். அதனால் விபத்து நடந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த நாளன்று பேருந்து செல்லும் இடத்திற்கான நேரம் கொண்ட அட்டவணையை போலீசார் விசாரணையில் நான் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எதிரியின் பெயர் எனக்கு எப்போது தெரியும் என்றால் சம்பவம் நடந்தபிறகு நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றபோது அன்று மாலையில் விசாரித்து பெயரை தெரிந்துகொண்டேன். சம்பவத்திற்கு முன்பு எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்தபிறகு எதிரி சுயநினைவின்றி இருந்தார் என்றால் சரிதான். நான் தொ.மு.சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். நான் கூறிய நாள் நேரத்தில் நான் கூறிய விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், என்னுடன் வேலை பார்க்கும் அ.சா.1க்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 பேருந்தை மேற்கிலிருந்து கிழக்காக அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சம்பவ நாளன்று ஓட்டிவந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. காவல்நிலையத்தில் சம்பவம் தொடர்பாக நான் கையெழுத்து ஏதேனும் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

மறுவிசாரணை இல்லை.